DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-------
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ERANIEL.

| | | |
|---|---|---|
| Calendar | } | CC 457/2013 |
| Miscellaneous | } | |
| Preliminary Register | } | |
| Sessions | } | |

| | | |
|---|---|---|
| | { | Prosecution PW. 1 |
| Deposition of witness for | { | Respondent |
| | { | Court |

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. பேபி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.04.2022.

<u>முதல் விசாரணை</u>:

நான் தெருவுக்கடையில் வசித்து வருகிறேன். சாட்சி 1 உஷா எனது மகள். அவர் தற்போது இறந்துவிட்டார். ஆஜர் எதிரிகளைத் தெரியும். ஆஜர் எதிரிகள் எனது மகளை திருமணம் செய்த செல்வன் என்பவரின் சகோதரிகள். எனது மகளின் கணவர் செல்வன் இறந்துவிட்டார். எனது மகளுக்கும் 1வது எதிரிக்கும் 2010ம் வருடம் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பு நிச்சயதார்த்தம் நடந்தது. திருமண நிச்சயதார்தத்திற்கு முன்பு 2 வாரங்களுக்கு முன்பு எனது மகளை பெண் பார்க்க மருமகன் செல்வனும், அவரது சகோதரிகளின் கணவர்கள் இரண்டு பேரும் பெண் பார்க்க வந்தார்கள். அவர்கள் பெண் பிடித்திருப்பதாகவும் 20 பவுன் நகையும், ஒரு லட்சம் ரொக்க பணமும் கேட்டார்கள். அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க நாங்கள் 20 பவுன் தங்க நகையும் ஒரு இலட்சம் ரொக்க பணமும் கொடுத்தோம். 20 பவுன் தங்க நகை திருமணத்தின் போதும், ஒரு இலட்சம் ரொக்க பணம் திருமணத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பும் கொடுத்தோம். திருமணம் ஆன பிறகு எனது மகள், மருமகனுடன் அவர்களது வீட்டில் வசித்து வந்தார்கள். பின்னர் எதிரிகள் எனது மகளை கூடுதல் வரதட்சணை பணம் ரூபாய் 3 இலட்சம் கேட்டு கொடுமைப்படுத்தியுள்ளார்கள். அவர்கள் கொடுமை தாங்க முடியாமல் ஒரு நாள் இரவு எனது மகள் அழுது கொண்டு எனது வீட்டிற்கு வந்து என்னிடம் சொன்னாள். எதிரிகள் கருங்கல் காவல்நிலையத்தில் நான் எனது

மகள் மற்றும் அடியாட்களுடன் சென்று எதிரிகள் வீட்டில் தகராறு செய்ததாக புகார் அளித்திருந்தார்கள். நாங்களும் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் எதிரிகள் மீது புகார் அளித்தோம். எதிரி செல்வன் எனது மகளிடமிருந்து 20 பவுன் நகையை கொஞ்சம் கொஞ்சமாக வாங்கி மற்ற எதிரிகளிடம் கொடுத்துள்ளார். ரூபாய் ஒரு இலட்சம் பணமும் எதிரிகளிடம் தான் உள்ளது. 20 பவுன் நகையும் எதிரிகளிடம் தான் உள்ளது. பின்னர் எனது வீட்டில் வேறு பெண் பிள்ளைகள் இருந்ததாலும், எனது மகளும் அவரது கணவரான 1ம் எதிரியிடமிருந்து பிரிந்து வாழ்ந்ததால் நான் எனது மகளை ஜெயசீலன் என்பவருக்கு இரண்டாவதாக திருமணம் செய்துக்கொடுத்தேன். எனது மகள் 2வது திருமணம் செய்து கொடுத்த பிறகு 10 மாதத்தில் இறந்துவிட்டார்.

(ஆவணங்களின் குறியீட்டிற்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)